Approved

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.24/2024**
**P.W.15**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.எம்.பாரதிதாசன் |
| Father's Name | : | திரு.எம்.மணி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 56 |

(Accused 2 is present. Accused 1 is absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of November 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி காவல் பயிற்சி பள்ளியில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.01.2024 அன்று திருச்சி மாவட்டம், ஜீயபுரம் உட்கோட்டம் காவல் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்தபோது ஜீயபுரம் உட்கோட்டத்திற்கு உட்பட்ட மண்ணச்சநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.31/2024, பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) இ.த.ச.உ/இ பிரிவுகள் 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST Act–ன் கீழான வழக்கை திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கை C.No.1/SJ&HR/PROCEEDINGS/TRI/2024 நாள்.30.01.2024ன்படி இந்த வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். திருச்சி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை

நடவடிக்கை C.No.1/SJ&HR/PROCEEDINGS/TRI/2024 நாள்.30.01.2024 **அ.த.சா.ஆ.11** ஆகும்.

மேற்படி வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று மாலை 18.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான இனாம் கல்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகே சென்று சாட்சிகள் புஷ்பராஜ் மற்றும் யோகராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ இடத்தை குறிக்கும் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.12** ஆகும்.

பின்பு சாட்சிகள் பிரபாகரன், சரவணன், பிரபுதேவா, ஞானவேல், சுப்பிரமணி, புஷ்பராஜ், யோகராஜா ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு வழக்கில் காயம்பட்டு திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த வழக்கின் புகார்தாரர் விஜயமாணிக்கம் என்கிற மாணிக்கம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இவ்வழக்கில் சாட்சிகளின் வாக்குமூலங்களின் படி சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரிகள் சதீஷ்குமார், பிரகாஷ் ஆகியோர்களை தேடி துப்பு வைக்கப்பட்டது. பின்பு 31.01.2024ம் தேதி கிடைத்த ரகசிய தகவலின் படி நங்கமங்கலம் சத்திரம் பஸ் ஸ்டாப் அருகில் காலை 7.00 மணிக்கு எதிரிகள் சதீஷ்குமார், பிரகாஷ் ஆகியோர்களை காரணம் கூறி கைது செய்தபோது அவர்களில் எதிரி சதீஷ்குமார் என்பவர் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் பிரகாஷ், ரஞ்சித்குமார் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் தொடர்ச்சியாக எதிரி சதீஷ்குமார் தன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் படுத்தினார். அதே

சாட்சிகள் முன்னிலையில் அந்த கத்தியை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். எதிரி சதீஷ்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.13** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.14** ஆகும். எதிரிகளையும், சுமார் 24 செ.மீ நீளமுள்ள கத்தியில் சுமார் 11 செ.மீ நீளம் ஆரஞ்சு கலர் கைப்பிடியும், சுமார் 13 செ.மீ நீளமுள்ள ஸ்டீல் பாகமும் கொண்ட கத்தியை படிவம் 91ன் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.த.சா.ஆ.15** ஆகும்.

பின்பு சாட்சிகள் முருகேசன், அசோக்குமார், பிரகாஷ், ரஞ்சித்குமார் ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் முத்துசாமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு 01.02.2024ம் தேதி இந்த வழக்கின் புகார்தாரர் விஜய மாணிக்கம் என்கிற மாணிக்கம், சாட்சி பிரபாகரன் மற்றும் எதிரிகள் சதீஷ்குமார், பிரகாஷ் ஆகியோர்களுக்கு சாதி சான்றிதழ் மெய்தன்மை சான்று வழங்க மண்ணச்சநல்லூர் வட்டாட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்.

பின்பு பணிமாறுதலில் சென்றுவிட்டதால் வழக்கின் கோப்புகளை ஜீயபுரம் உட்கோட்ட அலுவலகத்தில் ஒப்படைத்தேன். எனது விசாரணையின்போது சாட்சிகள் அ.சா.3 சரவணன், அ.சா.4 பிரபுதேவா ஆகியோர்கள் சம்பவத்தை கண்ணுற்றதாக கூறினார்கள். அ.சா.6 புஷ்பராஜ் சம்பவ இடத்தை நான் பார்வையிட்டு தயாரித்த பார்வை மகஜரில் கையொப்பம் செய்ததாக வாக்குமூலம் அளித்தார். அ.சா.9 ரஞ்சித்குமார் மற்றும் அ.சா.10 பிரகாஷ் ஆகிய இருவரும் எதிரி சதீஷ்குமார் என்பவர்

தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்ததாகவும், அதன் தொடர்ச்சியாக கத்தி கைப்பற்றப்பட்டதற்கான கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பம் செய்ததாகவும் வாக்குமூலம் அளித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நாளுக்கு நான்கு நாட்களுக்கு முன்பாக எதிரிகளுக்கும் பிரபாகர் என்பவருக்கும் இடையில் பிரச்சனை நடந்தது என்று என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் கூறியிருக்கிறார்கள். அந்தப் பிரச்சனை தொடர்பாக மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை. இந்த வழக்கில் சம்பவம் நடைபெற்ற நாளுக்கு மறுநாள் தான் புகார் கொடுத்திருக்கிறார்கள் என்றால் சரிதான். எதிரிகள் என்ன சாதியைச் சார்ந்தவர்கள் என்ற விவரம் புகார் வாக்குமூலத்தில் இல்லை. விபத்து பதிவேட்டில் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் அடித்ததாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் இடம் பஸ் ஸ்டாப் என்றால் சரிதான். நான் எதிரிகளை கைது செய்த போது அந்த இடத்தில் பொதுமக்கள் அதிகம் இருந்தார்களா என்றால் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் இருவர் அங்கே இருந்தார்கள். எதிரிகளை யார் எனக்கு அடையாளம் காட்டினார்கள் என்றால் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் தான் அடையாளம் காட்டினார்கள். காவல் நிலையத்திற்கும் எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் பஸ் ஸ்டாப்பிற்கும் இடைப்பட்ட தூரம் சரியாக நினைவில்லை. அன்றைய தினம் என்னுடன் எதிரிகளை கைது செய்த போது உதவி ஆய்வாளர் முத்துசாமி மற்றும் எனது வாகன ஓட்டுனர் தளபதி என்பவரும் உடன் இருந்தார்கள். முதல்

விசாரணையில் அதை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் போலீஸ் பார்ட்டி உடன் சென்று கைது செய்ததாக கூறியிருக்கிறேன். அன்றைய தினம் ஒன்பது மணிக்கு எதிரிகளை கைது செய்து பின்னர் ஒன்பது முப்பது மணிக்கு திரேக பரிசோதனை செய்து நிலைய பாராவில் ஒப்படைக்கப்பட்டது. சம்பவ இடத்தை நான் 30.01.2024ம் தேதி மாலை 6.00 மணிக்கு பார்வையிட்டேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு தான் சம்பவ இடத்தை பார்வையிட சென்றேன். அன்று 18 மணிக்கு பார்வை மகஜர் தயாரிக்க ஆரம்பித்து 19 மணிக்கு முடித்து விட்டேன். பார்வை மகஜர் சாட்சிகளின் அப்பா பெயர்கள் எனக்கு தெரியும். அவர்கள் பாதிக்கப்பட்ட நபரின் உறவினர்கள் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.